பக்கங்கள் : ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 வைகாசி 15 செவ்வாய்க்கிழமை (29.05.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 183

## மந்துவிலில் கிளைமோர் குண்டுகள் படையினரால் நேற்று மீட்பு

கொடிகாமம், மந்துவில் பகுதியில் நேற்று இரண்டு கிளைமோர் குண்டுகளுடன் இருவர் கைது செய்யப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

பலாலி நடவடிக்கைத் (06ஆம் பக்கம் பார்க்க)

## மந்துவிலில் இரு நாள்கள் தேடுதல்

மந்துவில் பகுதியில் கடந்த இரு தினங்களாக பெரும் எடுப்பில் தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

நேற்றுமுன்தினம் மந்துவில் கிழக்குப்பகுதியிலும் மட்டுவில் தெற்கிலும் சந்திரபுரத்திலும் நேற்று மந்துவில் மேற்கு, இயற்றாலை ஆகிய பகுதிகளிலும் சுற்றிவளைப்புத் தேடுதல் நடத்தப் பட்டது. (1-207)

## மட்டு. விமானப்படைத் தளத்தினுள் நுழைய முயன்ற பெண் மீது சூடு!

மட்டக்களப்பில் உள்ள விமானப்படையினரின் முகாமுக்குள் அத்துமீறி நுழைய முற்பட்டார் எனக் கூறப்படும் பெண் ஒருவர் படையினரின் துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு 11 மணியளவில் இடம்பெற்றுள்ளது. விமானப்படைத்தளத்தின் பாதுகாப்பு வேலியைக் கடந்து குறிப்பிட்ட பெண் உள்ளே நுழைய முற்பட்ட வேளையிலேயே படையினர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

48 வயதுடைய இந்தப் பெண் எதற்காக முகாமுக்குள் நுழைய முற்பட்டார் என்பது குறித்து எதுவித தகவல்களும் வெளிவரவில்லை. இந்தச் சம்பவம் தொடர்பாக விமானப் படையினர் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.(சி)

### பொத்துவில் வீதியில் கிளைமோர்த் தாக்குதலில்

## முஸ்லிம்கள் மூவர் உயிரிழந்தமையால் அட்டாளைச்சேனையில் பதற்றம்

கொழும்பு, மே 29

அக்கரைப்பற்று - பொத்துவில் வீதியில் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்ற கிளைமோர்த் தாக்குதலில் மூன்று முஸ்லிம் பொதுமக்கள் உயிரிழந்தமையை அடுத்து, அத்தாக்குதலுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாக அட்டாளைச்சேனைப் பகுதியில் நேற்றுக்காலை தொடக்கம் எதிர்ப்புப் போராட்டம் நடைபெற்றது. அதனால் அங்கு பதற்றம் நிலவியது. அட்டாளைச்சேனை பிரதேச வாழ் மக்கள் ரயர்களை வீதியில் போட்டு எரித்து எதிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டனர். (சி)

# இரத்மலானையில் கிளைமோர் தாக்குதல்


# எட்டுப் பொதுமக்கள் பலி; 25 பேர் காயம்

## விசேட அதிரடிப்படையின் "டிரக்"கே இலக்கு அதிலிருந்த நான்கு சிப்பாய்களும் காயம்

கொழும்பு, மே 29

**விசேட அதிரடிப்படையின் "டிரக்" ஒன்றை இலக்கு வைத்து நேற்று மாலை இரத்மலானை காலிவீதியில் நடத்தப்பட்ட கிளைமோர் தாக்குதலில், இரு பெண்கள் உட்பட எட்டுப் பொதுமக்கள் பரிதாபமாகப் பலியானார்கள். அதிரடிப்படைச் சிப்பாய்கள் நால்வர் உட்பட 25பேர்வரை படுகாயமடைந்தனர்.**

இரத்மலானை பெலிக்கடைச் சந்திக்கு அருகில் நான்காவது ஒழுங்கைக்குப் பக்கத்தில் - மக்கள் வங்கி முன்பாக - நேற்றுமாலை 5.40 மணியளவில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது. அப்பகுதியில் உள்ள பழைய கடை ஒன்றின் முன்பக்க மேல் புறத்தில் பெயர்ப்பலகையை ஒட்டி இந்தக் கிளைமோர்க்குண்டு மறைத்து, பதுக்கி பொருத்தி வைக்கப்பட்டிருக்கலாம் (06ஆம் பக்கம் பார்க்க)



கிளைமோர் தாக்குதலில் சிக்குண்ட அதிரடிப் படையினரின் வாகனம்

## இரத்மலானைத் தாக்குதலுக்கு விடுதலைப் புலிகளே பொறுப்பு

### இராணுவப் பேச்சாளர் சொல்கிறார்

கொழும்பு, மே 29

விசேட அதிரடிப் படையினரின் 'ட்ரக்' விடுதலைப்புலிகளின் கிளைமோர் தாக்குதலிலேயே சிக்கியது. இதனைப் புலிகள் தூர இயக்கி (ரிமோல்ட் கொன்றோல்) மூலம் வெடிக்க வைத்துள்ளனர்.

- இவ்வாறு இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க தெரிவித்துள்ளார்.

நேற்றைய தாக்குதல் சம்பவம் தொடர்பாக கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகள் நேற்று மாலை இரத்மலானையில் கிளைமோர் குண்டு ஒன்றினை வெடிக்க வைத்திருக்கிறார்கள்.

இந்தக் குண்டுத்தாக்குதலில் ஆறு சிவிலியன்கள் கொல்லப்பட்டும் மேலும் 18 சிவிலியன்கள் காயமடைந்துள்ளனர்.

(06ஆம் பக்கம் பார்க்க)

## ஓமந்தை சோதனை நிலையத்தைத் திறக்க செஞ். குழு தொடர்ந்து முயற்சி

### வன்னியில் நோயாளர்கள் அவலம்! சிலர் உயிரிழப்பு

கிளிநொச்சி, மே 29

ஏ - 9 வீதியில் உள்ள ஓமந்தை சோதனை நிலையத்தை மீண்டும் திறப்பது தொடர்பாக செஞ்சிலுவைச்சர்வதேசக்குழு தொடர்ந்து அரசுத் தரப்புடன் பேச்சு நடத்தி வருவதாக அக்குழுவின் பேச்சாளர் டேவிட் விக்ரட்டி நேற்று 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

ஓமந்தை சோதனைநிலையம் கடந்த வாரம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோக சம்பவத்தை அடுத்து மூடப்பட்டது தெரிந்ததே.

சோதனைநிலையத்தைத்திறப்பது தொடர்பாக செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின்

(06ஆம் பக்கம் பார்க்க)

## எம்.பிக்கள் மிரட்டப்படுவது குறித்து அரசிடம் விளக்கம் கோரியுள்ளது ஐ.நா.!

### ஐக்கிய தேசியக் கட்சி தகவல்

கொழும்பு, மே 29

ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு ஆகிய கட்சி களைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு விடுக்கப்படும் கொலைமிரட்டல்கள் தொடர்பாக இலங்கை அரசிடமிருந்து ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழு விளக்கம் கோரியிருக்கிறது.

இத்தகவலை வெளியிட்டிருக்கும் ஐக்கிய தேசியக் கட்சி. இலங்கை அரசு உடனடியாக ஐ. நாவுக்கு விளக்கமளிக்கவேண்டும் என்று வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜயவர்தன கூறியிருப்பதாவது:-

ஐக்கிய தேசியக் கட்சியினதும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினதும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குத் தொலைபேசியூடாகத் தொடர்ந்தும் கொலைமிரட்டல்கள் விடுக்கப்பட்டு வருகின்றன.

நாடாளுமன்ற உறுப்பினர்களின் மனித

(06ஆம் பக்கம் பார்க்க)

## தொடர்ந்து மூடியிருந்தால் வன்னியில் மனிதாபிமானப் பிரச்சினைகள் தோன்றும்

### கண்காணிப்புக் குழு அதிகாரி எச்சரிக்கிறார்

கொழும்பு, மே 29

ஓமந்தை இராணுவச் சோதனைச் சாவடி இந்த வாரத்துக்குள் திறக்கப்படவில்லை என்றால் வன்னியில் பெரும் மனிதாபிமானப் பிரச்சினைகளை மக்கள் எதிர்நோக்க வேண்டி வரும் என்று இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு எச்சரித்துள்ளது.

இது தொடர்பாக போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் தொமஹுர் ஒமல்ஸன் வழங்கிய செவ்வி ஒன்றில் இப்படித் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

செஞ்சிலுவைச் சர்வதேச குழுவின்

(06ஆம் பக்கம் பார்க்க)

## வதிரியில் நேற்றுமாலை திடீர் தேடுதல்

உடுப்பிட்டி, மே 29

வதிரிப் பகுதியில் நேற்று மாலை 4 மணியளவில் படையினர் திடீரென சுற்றிவளைப்புத் தேடுதல் ஒன்றை நடத்தினர்.

இத் தேடுதலின்போது ஒருவர் கைது செய்யப்பட்டதாகக் கூறப்பட்டது.

அந்தப் பகுதியில் நேற்றிரவு பதற்றமான நிலை காணப்பட்டது. (அ-1-155)

## நாட்டைப் பாதுகாப்பதற்காக 'இறைவனிடம் வேண்டுதல்' வழிபாடு

### நாடு முழுவதும் ஐ. தே. கவின் சமய வழிபாடுகள்

கொழும்பு, மே 29

மனித உரிமை மீறல்கள் உட்பட அரசின் செயற்பாடுகளில் இருந்து நாட்டைக் காக்கும் நோக்குடன் ஐக்கிய தேசியக் கட்சி 'இறைவனிடம் வேண்டுதல்' என்ற பெயரில் நாடு முழுவதும் சமய வழிபாடுகளை நடத்தவுள்ளது.

நாட்டில் இடம்பெற்றுவரும் ஆட்கடத்தல்கள், கொலைகள், கப்பங்கோரல்கள் போன்ற மனித உரிமை மீறல்கள், விலைவாசி அதிகரிப்பு, யுத்தம், அரசில் இடம்பெற்று

(06ஆம் பக்கம் பார்க்க)

## தெற்கில் மழை, மண்சரிவு அபாயம் என எச்சரிக்கை

நாட்டின் சில பகுதிகளில் மீண்டும் சீரற்ற காலநிலை தோன்றும் அறிகுறிகள் தென்படுகின்றன என்று வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரித்திருக்கின்றது. நாட்டின் தென்மேற்குப் பகுதிகளில் எதிர்வரும் நாள்களில் வெள்ளம் மற்றும் மண்சரிவு ஏற்பட வாய்ப்பு இருப்பதாக அத்திணைக்களம் அறிவித்துள்ளது.

கொழும்பு, காலி, மாத்தறை, களுத்துறை, கம்பஹா, கேகாலை, கண்டி, இரத்தினபுரி மற்றும் நுவரெலியா போன்ற பகுதிகளில் வெள்ளத்துடன்கூடிய மண்சரிவு ஏற்படும் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாசாலை, வரணி
2006ஆம் ஆண்டு தரம் 5 புலமைப் பரிசில்
பரீட்சையில் சித்திபெற்ற



கமலேஸ்வரன் பூங்குன்றன்
(154 புள்ளிகள்)



ஸ்ரீதரன் கார்த்திக்
(148புள்ளிகள்)

ஆகிய மாணவர்களைப் பாராட்டுவதுடன் இம் மாணவர்களைக் கற்பித்த அதிபர், ஆசிரியர்களையும் பாராட்டுகின்றோம். இவர்கள் மேன்மேலும் கல்வியில் சிறப்புப் பெற்று வளர வாழ்த்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர், பழைய மாணவர் சங்கத்தினர்.

(60924)

## கல்வியியற் கல்லூரியில் செயலமர்வு

தேசிய கல்வி நிறுவனத்தால் செயல் நிலை ஆய்வு தொடர்பான செயலமர்வு ஒன்று எதிர் வரும் இரண்டாம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி யில் நடைபெறவுள்ளது. அன்றைய தினம் மே மாதத்திற்கான கொடுப்பனவும் வழங்கப்பட வுள்ளது என்று கல்வியியற் கல்லூரி பீடாதிபதி தெரிவித்தார்.

## ஒத்துமாறல்

வவுனியா வடக்கு நகர்ப் பாடசாலை ஒன்றின் ஆரம்பப் பிரிவு ஆசிரியர் யாழ்ப்பாணத்திற்கு ஒத்துமாற விரும்புகிறார்.

தொடர்பு:- 0779 913700
786184385, 0773867357

## THE ROYAL COLLEGE OF JAFFNA

கல்லூரி ஆங்கிலத்தில் நடைபெறும் மற்றும் O/L, A/L, B.A. வினாவிடை இலக்கண வகுப்புகள் BY: விக்கினேஸ்வரன் ஆசிரியர், 426, (302) K.K.S. வீதி, யாழ்ப்பாணம் பிரதான வீதி சந்தை. • "THE ROYAL IS THE BEST" (61010)

## வீட்டுக் கிருத்திய அழைப்பு



அமரர் கணபதி சின்னையா
(உத்தியோகத்தர் - மலேரியா தடுப்புப் பிரிவு)

மலர்வு
20.01.1942

உதிர்வு
29.04.2007

கடந்த 29.04.2007 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் வீட்டுக் கிருத்திய நிகழ்வுகள் இன்று (29.05.2007) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கைதடி தெற்கு,
கைதடி.
(61026)
மனைவி, மக்கள்,
மருமக்கள்.






## மரண அறிவித்தல்கள்

### திருமதி தில்லைநாயகி லோகேஸ்வரன்

அரியாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி தில்லைநாயகி லோகேஸ்வரன் 27.05.2007 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் லோகேஸ்வரன் (ஓய்வுபெற்ற உத்தியோகத்தர், இ.போ.ச.) அவர்களின் அன்பு மனைவியும் சேரன், சேகரன், மயூரன், மயூரதி (ஆசிரியை - யாழ்.வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தாயுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

586,நாவலர் வீதி,
அரியாலை.
(61027)
தகவல்:
கா.லோகேஸ்வரன் (கணவர்).

### முருகேசு பச்சமாள் மருகன் (பச்சை)



வல்லிபுரக் குறிச்சியைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட பச்சமாள் மருகன் 24.05.2007 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் வியஜராணியின் அன்புக் கணவரும், திரு திருமதி முருகேசு தம்பதியரின் அன்புப் புதல்வனும் பொன்னம்பலக் குருக்கள் - நீலாம்பாள் தம்பதியரின் அன்பு மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பிரதான வீதி,
பருத்தித்துறை.
தகவல்:
பொன்னம்பலக் குருக்கள் (குடும்பம்).



ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

யாழ்ப்பாணம் - திருநெல்வேலி
அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தானம்

# தேர்த்திருவிழா

## விஞ்ஞாபனம்

29.05.2007 செவ்வாய்க்கிழமை காலை 6.00 மணிக்கு மூலஸ்தான அபிஷேகமும், 7.30 மணிக்கு வசந்த மண்டபப் பூஜையும், 8.30 மணிக்கு சித்திரத் தேரில் அம்பாள் ஆரோகணித்தலும் வீதியுலா வருதலும், 11.00 மணிக்கு பச்சை சாத்தி இரத அவரோகணமும், நவசக்திஅர்ச்சனையும் அதனைத் தொடர்ந்து மகேஸ்வர பூஜையும் நடைபெறும்.

### விஷேட மங்கள வாத்தியங்கள்

கே.ஆர். சுந்தரமூர்த்தி குழுவினர்
வி.கே. கானமூர்த்தி குழுவினர்
எஸ். பாலமுருகன் குழுவினர்
ஜெயம் குழுவினர்

அடியார்கள் அனைவரும் ஆசாரசீலர்களாக வருகை தந்து அம்பாளின் இஷ்ட சித்திகளைப் பெற்றுய்யும் வண்ணம் வேண்டுகின்றோம்.

" தருமத்தின் வாழ்வதனை சூதுகவ்வும்
தருமம் மறுபடி வெல்லும் என்னும்
மருமத்தை உன்னாலே கற்றுக்கொண்டோம்"



உண்ணும் சோறும் பருகும் நீரும் செய்யும் தொழிலும் எல்லாமே பத்திரகாளித்தாயே என்று வாழ்ந்த நீங்கள் அமரத்துவம் அடைந்து ஆறு ஆண்டுகள் ஆகிவிட்ட நிலையில்

இன்று பத்திரகாளித்தாய் தேரேறிவரும் உபயம்
உங்கள் தெய்வீகத் திருப்பணிகளுக்குச் சமர்ப்பணம்

ஆ. ஜீவரட்ணம் ஸ்தபதி குடும்பம்
(தேர்த்திருவிழா உபயகாரர்)
காளிகோவிலடி, திருநெல்வேலி.

## ஆறுமுகம் சிற்பாலயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெடுந்தீவுக் கடலில் மீன்பிடிக்க அடுத்த வாரமளவில் அனுமதி

## கடற்படை அதிகாரி உறுதி

நெடுந்தீவுக் கடற்பகுதியில் மீன்பிடித் தொழிலை மேற்கொள்வதற்கு அடுத்த வாரமளவில் அனுமதி வழங்கப்படும் என கடற்படை அதிகாரி தெரிவித்துள்ளார்.

கடந்த வியாழக்கிழமை நெடுந்தீவில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவத்தையடுத்து அப்பகுதியில் மீன்பிடிப்பதற்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

இவ்விடயம் குறித்து கடந்த சனிக்கிழமை பிரதேச கடற்படை அதிகாரி, கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் பிரதிநிதிகள் மற்றும் பிரமுகர்களுடன் சந்திப்பொன்றை நடத்தினார். அதன்போது மீன்பிடி அனுமதி மறுக்கப்பட்டதால் மீனவக் குடும்பங்களின் பாதிப்புகள் குறித்து சுட்டிக்காட்டப்பட்டது.

அவர்களின் கோரிக்கையை ஏற்றுக்கொண்ட கடற்படை அதிகாரி, அடுத்த வாரமளவில் நெடுந்தீவுப் பிரதேச கடலில் மீன்பிடிப்பதற்கு அனுமதி வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று உறுதியளித்தார். (202-111)

# மன்னார்க் கல்வி வலய ஆசிரியர்களை உடன் வேலைக்குத் திரும்புமாறு பணிப்பு

## பணிக்குத் திரும்பமுடியாதென கல்வியாளர்கள் முறைப்பாடு

யாழ்ப்பாணம்,மே29

மன்னார் கல்வி வலயத்தில் கற்பிக்கும் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த 20 ஆசிரியர்களையும் உடனடியாகக் கடமைக்குத் திரும்புமாறு கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் கையெழுத்திட்ட கடிதங்கள் உரியவர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

யாழ்.மாவட்டத்தில் தற்காலிக நியமனம் பெற்றுள்ள மன்னார் வலயத்தைச் சேர்ந்த ஆசிரியர்கள், உத்தியோகத்தரது இடமாற்றத்தை ரத்துச் செய்யுமாறும் அவர்களை மீண்டும் கடமைக்குத் திரும்புமாறும் மன்னார் வலயக் கல்விப் பணிப்பாளர் ம.ஆ.றெவல் அமைச்சின் செயலாளருக்கு ஆசிரியர்களது பெயர் விவரங்கள் அடங்கிய கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தார்.

இதற்கிடையில் அமைச்சின் செயலாளர் அவர்களைக் கடமைக்குத் திரும்புமாறு தான் ஒப்பமிட்ட கடிதங்களை அனுப்பிவைத்துள்ளார்.

இந்நிலையில் தற்போது நிலவும் போக்குவரத்துப் பிரச்சினைகள் காரணமாக வெளிமாவட்டங்களுக்குச் செல்லமுடியாத நிலையில், வெளிமாவட்ட ஆசிரியர்களுக்கு யாழ்.மாவட்டத்தில் தற்காலிக நியமனங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. இதற்கான ஏற்பாடுகளை மாகாணக் கல்வி அமைச்சின் பதில் செயலாளர் தில்லை நடராஜா மேற்கொண்டு வருகிறார்.

இந்நிலையில் மன்னார் வலயத்தில் கடமையாற்றும் ஆசிரியர்களுக்கு தனிப்பட்ட ரீதியில் கடிதங்கள் அனுப்பப்பட்டு, எதிர்வரும் முதலாம் திகதி முதல் கடமைகளைப் பொறுப்பேற்குமாறும் மேன்முறையீடுகள் எதுவும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என்றும் கூறப்பட்டுள்ளது.

புதிய பணிப்புரையால் ஆசிரியர்கள் மத்தியில் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது.

**இன்று அவசர கலந்துரையாடல்**

எனவே உரியவர்கள் இவ்விடயத்தில் கவனமெடுக்க வேண்டும் என்று பாதிக்கப்பட்ட கல்வியாளர்கள் முறைப்பாடு செய்துள்ளனர்.

இதேவேளை, மீளக்கடமைக்கு அழைக்கப்பட்டுள்ள மன்னார் வலய ஆசிரியர்களுக் கான அவசர கலந்துரையாடல் ஒன்று இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு யாழ். கல்வி வலயத்துக்கு அருகில் நடைபெறவுள்ளது. (203)




**யாழ்.மருத்துவபீட மாணவர்களும் வடமராட்சி லயன்ஸ் கழகத்தினரும் இணைந்து நடத்திய சலரோக விழிப்புணர்வுக் கண்காட்சியும் மருத்துவ முகாமும் கடந்த ஞாயிற்றுக்கிழமை கொற்றாவத்தை பூமகள் சனசமூக நிலையத்தில் நடைபெற்றன.**

**நோயாளர்கள் பரிசோதிக்கப்படுவதை முதலாவது படத்திலும் மருத்துவ முகாமின் ஆரம்ப வைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வடபகுதி கால்நடை வைத்திய அதிகாரி லயன் எம்.தங்கராசா கண்காட்சியைப் பார்வையிடுவதை இரண்டாவது படத்திலும் காணலாம்.** *(படங்கள் : சுந்தா)*

## நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்.மே.29

பேராசிரியர் சந்திரசேகரம் அவர்களின் நினைவுப்பேருரை நாளை புதன்கிழமை மாலை 4 மணிக்கு யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இதில் 'கணிதக்கல்வியும் மொழிப்பிரயோகமும்' என்னும் தலைப்பில் யாழ். பல்கலைக்கழக கல்வியியற்றுறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி த.கலாமணி நினைவுப்பேருரை நிகழ்த்தவுள்ளார். (203)

* * *

யாழ்ப்பாணம்.மே.29

யாழ்.சென்பற்றிக்ஸ் வீதியில் அமைக்கப்பட்டுள்ள சென்.றோக்ஸ் சனசமூக நிலைய பாலர் பாடசாலையின் திறப்பு விழா நாளை புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு இடம்பெறவுள்ளது.

சனசமூக நிலையத் தலைவர் க.திருவம்பலம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் யு.என்.ஹபிற்றாட் நிறுவனத்தைச் சேர்ந்த க.பரமேஸ்வரன் முதன்மைவிருந்தினராகக் கலந்துகொள்வார். (203)

# ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யோசனை அனைத்துக் கட்சிக் குழுவில் இன்று ஆராயப்படும்

கொழும்பு,மே29

இனப்பிரச்சினைத் தீர்வு குறித்த ஆலோசனைகளைத் தயாரிக்கும் சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவில் அங்கம் வகிக்கும் அனைத்துக் கட்சிகளுக்கும் ஸ்ரீ ல.சு.கட்சியின் ஆலோசனை வரைவு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இன்று கூடும் சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுக் கூட்டத்தில் இந்த ஆலோசனைகள் தொடர்பாக ஆராயப்படுமென அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழுவின் தலைவர் அமைச்சர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

ஜாதிக ஹெல உறுமய, ஐ. தே. கட்சியின் மாற்றுக் குழு ஆகியன சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழு கூடுவதற்கு முன்னர் தமது ஆலோசனைகளை சமர்ப்பிப்பதாகத் தெரிவித்துள்ளன என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

ஸ்ரீ. ல. சு. கட்சி தனது இனப்பிரச்சினைத் தீர்வுக்கான ஆலோசனைகளை சமர்ப்பிக்க காலம் தாழ்த்தியதால் கடந்த பெப்ரவரி மாதத்திற்குப் பின்னர் சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழு இன்றே கூடுகின்றதென்பது குறிப்பிடத்தக்கது.

ஜனதா விமுக்தி பெரமுனை தவிர்ந்த பதின்மூன்று அரசியல் கட்சிகள் அதிகாரப் பகிர்வு குறித்து ஆராய உள்ளன.

பதினான்கு அரசியல் கட்சிகள் இதுவரை தமது யோசனைகளை அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழுவுக்கு சமர்ப்பித்துள்ளன.

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி தனக்கென யோசனை எதனையும் சமர்ப்பிக்கவில்லை. ஆயினும் அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழுவின் தலைவர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண சமர்ப்பித்த அறிக்கையை ஆதரிப்பதாகத் தெரிவித்துள்ளது.

ஆளுங்கட்சியான ஸ்ரீ.ல.சு.கட்சி சமர்ப்பித்த யோசனையை அரசியல் கட்சிகள் பலவும் கண்டித்துள்ளன. ஒன்றையாட்சி முறையை விட்டு விலகிவிட்டதாகக் கூறி ஜே.வி.பி. அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழுவிலிருந்தே வெளியேறிவிட்டது. (அ)

# ஓய்வூதியர்களுக்கு ஜூன் மாத கொடுப்பனவு

குருநகர்,மே.29

அரச ஓய்வூதியர்களின் ஜூன் மாதத்திற்கான ஓய்வூதியக் கொடுப்பனவு எதிர்வரும் 12 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சகல வங்கிகளிலும் வழங்கப்படவுள்ளது.

தீவக ஓய்வூதியர்களுக்கான கொடுப்பனவை உதவி அரச அதிபர் பணிமனையிலும், ஊர்காவற்றுறை மக்கள் வங்கியிலும் பெற்றுக்கொள்ள வசதி செய்யப்பட்டுள்ளது.

# மருதங்கேணியில் பல்வேறு தடைகளால் வீட்டுத் திட்ட வேலைகள் தேக்கம்

## பாதிக்கப்பட்ட மக்கள் கவலை

உடுப்பிட்டி,மே 28

மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவில் ஆழிப்பேரலை அனர்த்தத்தால் வீடுகளை இழந்த மக்களுக்கான வீட்டுத் திட்டத்தை படையினர் விதித்துள்ள சில தடைகளால் விரைவாக முன்னெடுக்க முடியாதுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வீட்டுத்திட்ட வேலைகளைச் செய்வதற்குத் தேவையான பொருள்கள் வேறு பிரதேசங்களிலிருந்தே எடுத்துவரப்பட வேண்டும். அத்துடன் மேசன், கூலி போன்றவர்களும் வேறு பிரதேசங்களிலிருந்தே அழைத்துவரப்படவேண்டும்.

எனினும் அப்பிரிவுக்குள் பிரதேச மக்கள் தவிர்ந்த ஏனையோர் வருவதற்கும் வாகனங்கள் மற்றும் பொருள்களை உள்ளே கொண்டு செல்வதற்கும் படையினர் கட்டுப்பாடுகளும் தடைகளும் விதித்துள்ளனர்.

இதனால் வீட்டுத்திட்ட வேலைகளைத் தொடர்ந்து முன்னெடுக்க முடியாதுள்ளதாக என்று பாதிக்கப்பட்டோர் தெரிவிக்கின்றனர். (202-155)

# திருக்கேதீச்சரத்தில் முதியோர் இல்லம்

யாழ்ப்பாணம்,மே 29

திருக்கேதீச்சரத்தில் 'அம்மை அப்பன் முதியோர் இல்லம்' மகா சிவராத்திரி மட பரிபாலன சபையினரால் அமைக்கப்பட்டு வருகின்றது.

இந்த வருட முடிவிற்குள் இந்த இல்லக் கட்டட வேலைகளை நிறைவு செய்து அதனைத் திறந்துவைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

அறவழிச் செயற்பாடுகளை மேற்கொள்ளும் குடும்பம் ஒன்றின் நிதி உதவியுடன் இந்த இல்லத்தின் கட்டட வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதன் கட்டட வேலைகளை விரைவில் முழுமையாகப் பூர்த்தி செய்வதற்கு உதவிகள் கோரப்பட்டுள்ளன.

இந்த நற்பணிக்கு உதவ விரும்புபவர்களை மன்னார் ஹற்றன் நஷனல் வங்கிக் கணக்கு இலக்கம் 020-0001-3626901-8 இல் வைப்புச் செய்யுமாறு மட பரிபாலன சபையினர் கேட்டுள்ளனர். (அ-203)

# சண்டிலிப்பாயில் கால்நடைகளுக்கு செயற்கைமுறை சினைப்படுத்தல்

வலி.தென்மேற்கு மே29

சண்டிலிப்பாயில் கால்நடை வைத்திய அதிகாரி பணிமனையில் ஆடுகளுக்கும் பசுமாடுகளுக்கும் செயற்கைமுறையில் சினைப்படுத்தல் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

வலி.தென்மேற்குப் பிரதேசத்தில் உள்ள பண்ணையாளர்கள் மற்றும் வீடுகளில் கால்நடை வளர்ப்போர் செயற்கை முறையில் அவற்றைச் சினைப்படுத்துவதற்கு இப் பணிமனையில் பதிவுசெய்துகொள்ள முடியும் என்று சண்டிலிப்பாய் கால்நடை வைத்திய அதிகாரி டாக்டர் அமுதா பிரபாகரன் தெரிவித்தார்.

இங்கு சினைப்படுத்தப்படும் பசுமாடுகள் பசுக் கன்று ஈன்றால் அதற்கு கல்சியச் சத்துப் பவுடரும் பூச்சி மருந்தும் இலவசமாக வழங்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (202-135)

# புலிகள் அமைப்பின் ஆள், ஆயுத பலம் மிகவும் குறைந்துவிட்டது

## கண்டியில் இராணுவத் தளபதி பொன்சேகா

கண்டி,மே29

பயங்கரவாதம் குறித்து தமிழ் மக்கள் விரக்தியடைந்து வருகிறார்கள். புலிப் பயங்கரவாதிகள் இப்போது ஆள் பலத்திலும் ஆயுத பலத்திலும் மிகவும் பலவீனமடைந்து விட்டார்கள். வடக்கு, கிழக்கில் எதிர் நடவடிக்கைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அதேசமயம் தமிழ் மக்களால் புலிகள் புறக்கணிக்கப்பட்டு வருகிறார்கள்.

இவ்வாறு கூறியுள்ளார் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா.

இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சரத் பொன்சேகா கடந்த 26ஆம் திகதி கண்டியில் மல்வத்தபீட மகாநாயக்கர் திப்பட்டுவாவே ஸ்ரீ சுமங்கல சித்தார்த்த தேரரைச் சந்தித்தபோது மேற்கண்டகருத்தை வெளியிட்டார். அவர் மேலும் கூறியதாவது-

"வடக்கு - கிழக்கில் இடம்பெறும் பயங்கரவாத சம்பவங்கள் காரணமாக அப்பிரதேசங்களில் வாழ்வோர் அதிருப்தியுடனேயே வாழ்ந்து வருகிறார்கள்.

கிழக்கில் இப்பொழுது மக்கள் தாம் வாழ்ந்த சொந்த இடங்களுக்கு அனுப்பி வைக்கப்படுகிறார்கள். அங்கெல்லாம் பாடசாலைகள், வீதிகள் உட்பட அரச திணைக்கள அலுவலகங்களும் புனரமைக்கப்பட்டு வருகின்றன. புலிகள் இயக்கத்தில் இருந்து அண்மையில் ஆறு சிறுவர்கள் இராணுவத்தினரிடம் சரணடைந்தனர். அவர்கள் தமது வீடுகளுக்குச் செல்லவேண்டுமென்கிறார்கள்.

இதேவேளையில் இராணுவத்தினரிடம் சிக்கிய 250 பயங்கரவாதிகளுக்கு இப்பொழுது புனர்வாழ்வு வழங்கப்பட்டு வருகின்றது. கடந்த 15 - 20 வருடங்களாக இடம்பெற்று வரும் யுத்தநிலை காரணமாகவும் பயங்கரவாதம் காரணமாகவும் தமிழ் மக்கள் அனுபவிக்கும் துன்பமும் கஷ்டங்களும் ஏராளம்.

**பயங்கரவாதத்தை முழுமையாக அழிப்போம்**

இன்று சிறு தவறு ஒன்றைப் புரிந்தால் கூட இராணுவத்தினர் மீது பலர் விமர்சனம் செய்கிறார்கள். 20 வருடமாக இடம்பெற்று வரும் இந்த யுத்தத்தைப் படிப்படியாகவே முடிவுக்குக் கொண்டுவர வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. [illegible] பயங்கரவாதத்தை முழுமையாக இல்லாமல் செய்வதே எமது அடிப்படை நோக்கமாகும். பின்னர் அத்தகைய பயங்கரவாதம் தலைதூக்க இடமே கிடையாது'' என அவர் மேலும் தெரிவித்தார்.



மல்வத்த பீடாதிபதி கருத்து வெளியிடுகையில் கூறியதாவது:-

யுத்தம் என்ற வகையில் உலகில் அது எங்கு இடம்பெற்றாலும் பௌத்தர் என்ற ரீதியில் நாம் அதனை அனுமதிக்க இயலாது. எமது நாட்டில் இடம்பெறும் யுத்த மானது சமாதானத்தையும் அமைதியையும் விரும்பும் பெரும்பாலான தமிழ் மக்களுக்கு பெரும் பாதகமாக அமைந்துள்ளது.

இந்நாட்டில் வாழும் அனைத்து மக்களினதும் அபிலாஷை, அமைதியும் சமாதானமும் நிலைக்க வேண்டும் என்பதாகும்.

தலைநகரில் இருந்துகொண்டு யுத்தம் பற்றி விமர்சிப்பவர்கள் யுத்த நிலைவரத்தை நேரில்கண்டு விமர்சிப்பதே சாலச்சிறந்ததாகும். [illegible] இந்த யுத்தத்தின் போது சமாதானத்தையும் அமைதியையும் நிலைநாட்டவே பாடுபடுகிறார்கள் - என்றார்.(சி-ப)

# உடற்பயிற்சிப் போட்டி

வடமராட்சி.மே.29

வடமராட்சி கல்வி வலய பாடசாலை மாணவர்களின் உடற்பயிற்சிப் போட்டிகள் நாளை புதன்கிழமை காலை 8.30 மணி முதல் நெல்லியடி ம.ம.வித்தியாலய மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி.புஸ்பலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் வலயக் கல்விப் பணிப்பாளர் வி.செல்வராசா பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (203-160)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொதுக் கூட்டம்

கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாசாலை அபிவிருத்திச் சங்கப்பொதுக்கூட்டம் 03.06.2007 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு அதிபர் தலைமையில் நடைபெறவுள்ளது. அங்கத்தவர்கள் தவறாது கலந்து கொள்ளவும்.

க.இராஜேந்திரன்,
செயலாளர்,
கொக்குவில். (61602) கொக்குவில் ஸ்ரீ இ.வி.அ.ச.

## கண்ணீர்க் காணிக்கை

எமது வித்தியாலயத்தின் கணித ஆசிரியை திருமதி தயாநிதி ஜெயானந்தா அவர்களின் பாசமிகு தந்தை

**முத்தையா பொன்னுத்துரை**

அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்கேற்பதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர்.

யா/மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலயம், சாவகச்சேரி. (61011)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



**அமரர் சின்னறஞ்சன் சிவனையா**

(எம்.எஸ்.மருந்தக ஊழியர்)

தோற்றம்: 21.06.1946

மறைவு: 29.04.2007

கடந்த 29.04.2007 அன்று சிவபதமடைந்த எமது குடும்ப விளக்கின் 31 ஆம் நாள் அந்தியேட்டிக் கிரியைகளும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் இன்று 29 - 05 - 2007 செவ்வாய்க் கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்விலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

17, மணல்தறைலேன், கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

தகவல்: குடும்பத்தினர். (60990)

## ஓராண்டு நினைவலைகள்

தோற்றம் 06 - 04 - 1943



மறைவு 09 - 06 - 2006

**அமரர் சிவபாதம் சோதிலிங்கம்**

திதி: பூர்வ பக்க திரயோதசி

இல்லறத்தின் வேராக நின்று எமக்காக உழைத்தவரே !
ஆலம் விழுதுபோல உறவுகள் ஆயிரம் இருப்பினும்
'அப்பா' என்றழைக்க உறவில்லாமல்
எமைப் பரிதவிக்க விட்டதேனோ?
எமைப்பிரிந்து ஆண்டு ஒன்று ஆனாலும்
ஏற்றிய தீபமாய் எம் நெஞ்சில் வீற்றிருப்பீர்
ஆறாது எம் துயர் அழியாது உங்கள் நினைவு
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

விநாயகலேன், கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

- குடும்பத்தினர். (60940)

## மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், சைவபோசனம், 1980இல் பிறந்த சித்திரை 3ஆம்கால், உயரம் 5'4½" கிரவுபாவம் 24 உடைய பட்டதாரி ஆசிரிய மணமகளுக்குப் பெற்றோர், உள்நாட்டில் (B.Sc.Teacher/Engineer/ உயர் பதவியிலுள்ள) அல்லது வெளிநாட்டில் (London/Canada) PR உள்ள கௌரவமான மணமகனை எதிர்பார்க்கின்றனர். விளம்பர இல. 2973 மே/பா உதயன். (60902)

## சேவல் குஞ்சு விற்பனைக்கு

3 நாள் நிரம்பிய சேவல் குஞ்சு விற்பனைக்கு உண்டு. விலை 50/=

(60983) NEW R.S.K FARM
மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில்.

## கொழும்பு - யாழ் - கொழும்பு விமான சேவை

கொழும்பு - யாழ். விமானப் பயணிகளின் நலன் கருதிப் புதிய பயணிகள் விமான சேவை விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

பொதிகளும் ஏற்றுக்கொள்ளப்படும். முன்கூட்டியே உங்கள் ஆசனங்களைப் பதிவுசெய்து கொள்ளவும்.

மேலதிக விவரங்களுக்கு:
EURO GROUP
077 3846998
011 4542190

(சி/52441)

## விமானப் பொதிகள் சேவை

உங்கள் பொதிகள் யாழ்.-கொழும்பு அல்லது கொழும்பு-யாழ். தினசரி விமானம் மூலமாக உடனடியாக அனுப்பி வைக்கப்படும். வியாபாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.கிளியரன்ஸ்இல்லாதபொருள்கள் M.O.D பெற்று உத்தரவாதத்துடன் அனுப்பி வைக்கப்படும். தொடர்பு:

**EURO GROUP**
077 3846998, 011 4542190

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



மண்ணில்: 21 - 06 - 1946
விண்ணில்: 29 - 04 - 2007

**அமரர் சின்னறஞ்சன் சிவனையா**

(சுந்தரம் பிறதேர்ஸ் ஊழியர்)

எமது நிறுவகத்தில் நீண்டகாலமாகப் பணியாற்றி இறைபதம் அடைந்த அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதுடன் அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

உரிமையாளர்:
சுந்தரம் பிறதேர்ஸ்
(எம்.எஸ்.மருந்தகம்)

மணல்தறை ஒழுங்கை, திருநெல்வேலி. (61020)

## அறிவித்தல்



**தற்காலிக கடைகள்**
**திருவிழாக்கால**
**உடைதேங்காய் ஏலம்**

மேற்படி ஆலய வருடாந்த உயர் திருவிழா 16.06.2007 ஆம் திகதியன்று ஆரம்பமாகி 01.07.2007 ஆம் திகதியன்று நிறைவுபெறும். இக்காலத்தில் தற்காலிகமாக வியாபாரம் செய்வதற்கு நிருவாகத்தினரால் சுட்டிக் காட்டப்படும் இடங்கள் 03.06.2007ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 12.30 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விடப்படும்.

உயர் திருவிழாக் காலத்தில் சேரும் உடை தேங்காய்களுக்கான பகிரங்க ஏலமும் அன்றைய தினத்திலேயே கூறப்படும் என்பதையும் அறியத் தருகின்றோம்.

பங்குபற்ற விரும்புவோர் குறிப்பிட்ட நேரத்தில் தவறாது வருகை தந்து நடைபெறும் பகிரங்க ஏலத்தில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

அன்னையின் சேவையில்

நா.யோகநாதன்
நிறைவேற்று அலுவலர்
(சி-52499) ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில், நயினாதீவு.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு: 08 - 12 - 1936



இறப்பு 29 - 05 - 2006

அமரர்

**மைக்கல் யேசுதாசன்**

அமைதியின் பெயர் கொண்டு
அதற்குப் பொருள் சொல்லி
அமைதியாய் அடங்கிப் போய்
ஆண்டு ஒன்று ஆகுதய்யா!

78/11, கடற்கரை வீதி, நாவாந்துறை, யாழ்ப்பாணம்.

மனைவி, பிள்ளைகள். (60940)

## கண்ணீர் அஞ்சலி



எமது அலுவலகத்தின் நிதி உதவியாளர் வே.குமாரசாமி அவர்களின் தயார் திருமதி வேலுப்பிள்ளை பொன்னம்மா அவர்கள் 23.05.2007 அன்று இறைபதம் எய்தியதால் துயருற்று இருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவருடைய ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

உதவி அரசாங்க அதிபரும்,
உதவி அரசாங்க அதிபர் அலுவலக நலன்புரிச் சங்கமும்,
(61001) காரைநகர்.

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



அமரர்

**பிள்ளையார் ஆசை சோதிராசா**

(பிரபல வர்த்தகர், முன்னாள் சோதிகடை உரிமையாளர், சங்கானை)

மலர்வு 22-12-1939

உதிர்வு 29-04-2007

கடந்த 29.04.2007 அன்று இறைபதம் அடைந்த எம் குடும்பத் தலைவர், சுகவீனமுற்ற வேளை, இல்லத்திலும் கொழும்பு, யாழ்ப்பாணம்,சங்கானை மற்றும் தனியார் வைத்திய சாலைகளில் மருத்துவ உதவிகள் வழங்கிய வைத்திய சமூகத்தினருக்கும் இறுதிவரை உற்றதுணையாக இருந்த உறவினர்கள், அயலவர்கள், நண்பர்கள், மற்றும் தொலைபேசி, தந்திகள் கடிதங்கள் மூலம் ஆறுதல் கூறியவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

எமது குடும்பத் தலைவரின் அந்தியேட்டி வீட்டுக் கிருத்திய நிகழ்வுகள் அன்னாரது இல்லத்தில் இன்று [29.05.2007] செவ்வாய்க்கிழமை காலை நடைபெறும். இந்நிகழ்வில் பங்கு கொள்வதோடு, தொடர்ந்து நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

'சோதி வாசா' நிர்சாமம், சங்கானை. (60913) குடும்பத்தினர்.

## வல்வெட்டித்துறை நகராட்சி மன்றம்

## கேள்வி அறிவித்தல்

கீழ்வரும் வேலைகளுக்கான கேள்விகள் என்னால் 15.06.2007 நண்பகல் 12 மணிவரை ஏற்றுக் கொள்ளப்படும். இக்ராட் எம் 9 பதிவுள்ளோர் கேள்விப் படிவங்களை 01.06.2007ஆம் திகதியிலிருந்து 14.06.2007 ஆம் திகதி பி.ப. 2 மணிவரை குறிப்பிட்ட வேலைகளுக்கெதிரே உள்ள வைப்புப் பணத்தினையும் படிவக் கட்டிணத்தையும் பணமாக செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். கேள்விகள் 15.06.2007 ஆம் திகதி பி.ப 2 மணிக்கு திறக்கப்படும். கேள்விப் ப்டிவத்தின் ஒரு பிரதியை கடித உறையிலிட்டு அரக்கு முத்திரை வைத்து செயலாளர், நகராட்சி மன்றம், வல்வெட்டித்துறை என்ற முகவரிக்கு நேரில் அல்லது பதிவுத் தபால் மூலமும் 2ஆவது பிரதியை ''பி.உ.உ.ஆணையாளர், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கும் அனுப்புதல் வேண்டும். மேலதிக விவரங்களை அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

| வேலை விவரம் | இக்ராட் பதிவு தரம் | மீளளிக்கப்படும் கே.வைப்பு பணம் | கேள்விப் படிவக் கட்டணம் வற்வரி உட்பட |
|---|---|---|---|
| 1. தற்காலிக மரக்கறிச் சந்தை அமைத்தல் | M9 | 4800.00 | 690.00 |
| 2. தற்காலிக மீன் சந்தை அமைத்தல் | M9 | 1400.00 | 690.00 |
| 3. தற்காலிக மாட்டிறைச்சிக்கடை அமைத்தல் | M9 | 420.00 | 690.00 |
| 4. கட்டாக்காலி நாய்களை அழிப்பதற்கான தொட்டி அமைத்தல் | M9 | 3100.00 | 690.00 |
| 5. தொண்டைமானாறு ஆற்றங்கரை வீதித் திருத்தம் | M9 | 475.00 | 690.00 |

கு.அமிர்தலிங்கம்
செயலாளர்,
நகராட்சி மன்றம், வல்வெட்டித்துறை.

(சி-52469)

நகராட்சி மன்ற அலுவலகம்,
வல்வெட்டித்துறை.
25.05.2007

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# உளுத்துப் போன திட்டங்கள் தீர்வு யோசனை வடிவத்தில்!

இலங்கையில் யுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் இலங்கை அரசுப் படைகள், தமிழீழ விடுதலைப் புலிகள் ஆகிய இரு தரப்பினருமே தத்தமக்கு இராணுவ வெற்றி கிட்டும் என்பதில் அதீத நம்பிக்கை உடையவர்களாக இருக்கின்றார்கள். அதனால் இலங்கையில் வரும் வாரங்களில் வன்முறை கட்டவிழ்ந்து, போர் வெடித்து, இரத்த ஆறு ஓடுவது நிச்சயம்.

- இலங்கை நிலைவரம் குறித்து இராஜதந்திரிகள் இவ்வாறு கணிப்பீடு செய்திருக்கின்றார்கள் என்று கூறப்படுகின்றது.

ஒரு பக்கத்தில் போர் முரசம் அறையப்படுகையில், மறுபக்கத்தில், அமைதித் தீர்வுக்கான சமாதான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன என்று சர்வதேச சமூகத்துக்குக் காட்டும் ஏமாற்று நாடகமும் அரங்கேறுகின்றது.

இந்த நாடகத்தின் ஓர் அங்கமாக அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழு இன்று கூடுகின்றது.

அமைதித் தீர்வுக்கான ஆலோசனை எனத் தெரிவித்து ஆளும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி சமர்ப்பித்த யோசனைத் திட்டத்தை சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழு இன்று ஆராயவிருப்பதாகக் கூறப்படுகின்றது.

1980 களின் ஆரம்பத்தில் சமர்ப்பிக்கப்பட்டு, தமிழர் தரப்பால் நிராகரிக்கப்பட்ட மாவட்ட அபிவிருத்தி சபைத் திட்டத்தை ஒட்டிய - ஏறத்தாழ அதேபோன்ற - யோசனை நகலையே ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி மீளத் தோண்டி எடுத்து இப்போது சமர்ப்பித்திருக்கின்றது.

அந்தத் திட்டத்தைச் சமர்ப்பிக்கவும் சுதந்திரக்கட்சி காலத்தை இழுத்தடித்ததால், சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழு சுமார் மூன்று மாதம் காத்திருந்து, இப்போது கூடுகின்றது.

இதேசமயம், ஆளும் தரப்பில் உள்ள மற்றொரு பௌத்த - சிங்கள மதவாதக் கட்சியும், பேரினவாத அமைப்புமான ஜாதிக ஹெல உறுமயவும் தீர்வுக்கான தனது யோசனைத் திட்டத்தை சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவுக்கு இன்று சமர்ப்பிக்கும் எனக் கூறப்படுகின்றது.

'உலக்கை தேய்ந்து உளிப்பிடியானது' போல -'கழுதை தேய்ந்து கட்டெறும்பானது' போல - ஜாதிக ஹெல உறுமய முன்வைக்கும் தீர்வு யோசனைத் திட்டமும் அமைந்திருப்பது வேடிக்கையானது.

'வடக்கு - கிழக்கு இணைந்த தமிழர் தாயகத்தில் சுயாட்சி பெறுவதற்காக' இரத்தம் சிந்தி, உயிரையும் உடைமைகளையும் ஆகுதியாக்கி, தலைமுறைகளை ஈகம் செய்து, தமிழர்கள் போராட-

மறுபுறம் இப்பிரச்சினையை அமைதி வழியில் தீர்ப்பதற்கான யோசனைத்திட்டம் என்ற பெயரில், கிராமங்களுக்கு அதிகாரத்தைப் பகிரும் முறைமை என்று கூறப்படும் 'கிராம சபை முறை' அல்லது 'பஞ்சாயத்து முறை' குறித்து பேரினவாதக் கட்சியான ஹெலஉறுமய பேசுகிறது.

நெருப்பாகத் தகிக்கும் ஈழத் தமிழர்களின் தேசிய இனப் பிரச்சினைக்கு மாவட்ட மட்ட அதிகாரப் பரவலாக்கம் என்ற கோதாவில் ஆளும் தரப்பின் பிரதான கட்சியும், கிராம மட்ட அதிகாரப் பரவலாக்கம் எனற பெயரில் ஆளும் தரப்பின் கூட்டணிக் கட்சியான ஹெல உறுமயவும் தீர்வு யோசனைகளை முன்வைப்பது, தமது நியாயமான உரிமைகளுக்காகப் போராடும் ஈழத் தமிழர்களைக் கேலிசெய்து, முட்டாள்களாக்கும் முயற்சியன்றி வேறில்லை.

1980 களின் முற்பகுதியில் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் அப்போதைய அரசினால் முன்வைக்கப்பட்ட மாவட்ட அபிவிருத்தி சபைத்திட்டம் தமிழர்களால் அப்போதே நிராகரிக்கப்பட்டு செயலிழந்த பின்னர்தான், உரிமைக்கான தமிழரின் போராட்டம் முழு அளவில் ஆயுத எதிர்ப்புப் புரட்சியாக வடிவெடுத்து, விடுதலைக்கான சுதந்திரப் போராட்டமாக உருக்கொண்டு வன்முறைப்புயல் வீச வழிசெய்தது. இந்தப் புறநிலை அம்சங்களைக் கவனத்தில் எடுக்காமல் புறக்கணித்துக்கொண்டு, 'மீண்டும் பழைய குருடி கதவைத் திறவடி!' என்ற கணக்கில், - செத்துச் செயலிழந்த மாவட்டசபை முறையை - மஹிந்த அரசு தூசுதட்டித் தூக்கியெடுத்து மீண்டும் முன்வைத்திருக்கின்றது.

நீதி முறைமையின் பெயரால் தமிழர்களின் மரபுவழித் தாயகத்தை கூறுபோட்டு, அவர்களின் பூர்வீக வாழிடங்கள் மீது கொடூர இராணுவ நடவடிக்கைகளைக் கட்டவிழ்த்து விட்டு, இடப்பெயர்வுகள், வகைதொகையற்ற கைதுகள், சிறைவைப்புகள், சித்திரவதைகள், ஆள்கடத்தல்கள், காணாமற் போகச் செய்தல்கள், படுகொலைகள், சொத்துச் சூறையாடல்கள் என்று பெரும் மனிதப் பேரவல நெருக்கடிக்குள் தமிழர்களை ஆழ்த்தி வதைக்கிறது அரசு.

தொடர்ச்சியான போர் நடவடிக்கைகளும் இராணுவ அழுத்தங்களும் என்றுமில்லாதவாறு தமிழர் தாயகம் மீது கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கின்றன. பல்லாயிரம் தமிழர்கள் தத்தமது சொந்த வீடுகளில் இருந்து வேரோடும் வேரடி மண்ணோடும் குடி பெயர்க்கப்பட்டு, நோயும், பிணியும், பசியும், பட்டினியும் வாட்ட, அடிப்படை வசதிகளின்றி அகதி முகாம்களில் அல்லற்படுகின்றார்கள்.

நியாயமான - சட்டபூர்வமான - உரிமை கேட்டுப் போராடும் தமிழினத்துக்கு ஒரு பக்கத்தில் இத்தகைய கொடூர மனிதப் பேரவலத்தைப் பரிசாக - பாடமாக - கொடுத்த தென்னிலங்கை, மறுபுறம், இந்தப் பூதாகாரப் பிரச்சினைகளிலிருந்து விடுபடுவதற்கான வழியாக மாவட்ட சபை, கிராமசபை முறைகளை 'பிச்சையாக' தூக்கி வீசும் கருணையைத் தமிழர்களுக்கு ஈயவும் முன்வந்திருக்கின்றது.

ஈழத் தமிழரின் தேசிய இனப்பிரச்சினை விடயத்தில், இராணுவ மேலாதிக்க நிலையில் நின்று கொண்டு, தான் விரும்பும் அரைகுறைத் திட்டத்தைத் தீர்வாகத் தமிழர்களின் மீது கட்டிவிடுவதே கொழும்பு அரசின் தீர்க்கமான முடிவாகும். அதுவே இப்போது வெளிப்படுகின்றது.

உரிமைகளைப் பெறுவதற்கான போராட்டத்தில் தமிழர்கள் இரும்பை ஒத்த உறுதியாக இருக்கும் வரை இத்தகைய சலுகைகளும், பிச்சைகளும் தீர்வாகி விடா.

தமிழர் தரப்பினால் பரிசீலனைக்குக் கூடத் தொட்டுப்பார்க்கத் தகுதியற்ற வெறும் காகிதாதித் திட்டங்களாக அவை அடிபட்டுப் போகும். என்பதனை இப்போதே அடித்துச் சொல்லலாம்!

# தமிழ் மக்களின் அபிலாசைகளுக்காக சர்வகட்சி மாநாட்டில் குரல்கொடுப்போம்

## ஈ.பி.டி.பி. அறிவிப்பு

யாழ்ப்பாணம், மே 29

எமது மக்களின் தீர்மானங்களுக்கும் விருப்பங்களுக்கும் மதிப்பளித்து கௌரவமான அரசியலுரிமைச் சுதந்திரம் ஒன்றை ஏற்படுத்துவதற்கு நாம் உறுதி பூண்டிருக்கின்றோம். இதனை அடிப்படையாகக் கொண்டு நாம் இன்று நடைபெறும் அனைத்துக் கட்சி மாநாட்டில் எமது நிலைப்பாட்டை உறுதியுடன் வலியுறுத்துவோம் - என்று ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அக்கட்சி விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

தீர்வுக்கு வழியின்றித் தீராப் பிரச்சினையாக இழுபட்டுச் செல்லும் முடிவற்ற யுத்தம் எமது மக்களின் வாழ்வின் மீது பாரிய சுமையை சுமத்தியுள்ளது. யுத்தத்தினால் எமது அரசியல் உரிமைப் பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியாது என்ற உண்மையை தொடரும் வன்முறைகள் உணர்த்தியிருக்கின்றன.

இத்தகைய அவலங்களில் இருந்து விடுபட்டு, வன்முறையற்ற இனிய வாழ்வை அனுபவிப்பதற்கு அரசியல் உரிமைச் சுதந்திரத்தை நோக்கி நாம் முன்னேற வேண்டியுள்ளது. இன்றைய சூழலில் அமைதித் தீர்விற்கும் அரசியல் உரிமைச் சுதந்திரத்திற்குமான சந்தர்ப்பம் மறுபடியும் தோன்றியுள்ளது.

அனைத்து அரசியல் கட்சிகளையும் உள்ளடக்கிய அனைத்துக் கட்சி மாநாட்டின் மூலம் எமது மக்களுக்கான அமைதியானதும், கௌரவமானதும், சுதந்திரமானதுமான வாழ்வை உருவாக்கிக் கொடுப்பதற்கு நாம் கடுமையாக உழைத்து வருகின்றோம்.

**எமது அதிருப்தியை ஜனாதிபதியிடம் தெரிவித்துள்ளோம்**

அனைத்துக் கட்சி மாநாட்டில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் தீர்வு யோசனை ஒன்றை சமர்ப்பித்திருக்கின்றது. தமிழ் பேசும் மக்களின் அரசியல் அபிலாசைகளுக்குத் தீர்வுகாண முடியாத வகையில் அத்தீர்வு யோசனை அமைந்திருப்பது குறித்து எமது செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா ஜனாதிபதியிடம் சுட்டிக்காட்டியுருக்கின்றார். அதற்கான இறுதிமுடிவை மாநாடு தான் எடுக்கும் என்று ஜனாதிபதி செயலாளர் நாயகத்திடம் பகிரங்கமாகத் தெளிவுபடுத்தியிருக்கின்றார்.

மத்தியில் கூட்டாசி! மாநிலத்தில் சுயாட்சி!! எமது மக்களின் வரலாற்று வாழ்விடமான வடக்கு, கிழக்கிற்கு விசேட அதிகாரங்கள், இணைந்த வடக்கு, கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம் சகோதர மக்களுக்கு தனியான அலகு போன்றவையே எமது அரசியல் நிலைப்பாடாகும் - என்றுள்ளது. (1-202)

## றுகுணு கப்பலில் வந்த பொருள்கள் விநியோகம்

யாழ்ப்பாணம், மே 29

குடாநாட்டுக்கு 'றுகுணு' கப்பல் மூலம் எடுத்துவரப்பட்டுள்ள பொருள்கள் இன்று தொடக்கம் ப. நோ. கூ. சங்கங்களுக்கு வழங்கப்படவுள்ளன.

இந்தப் பொருள்களைப் பெற விரும்பும் ப.நோ.கூ. சங்கங்கள், புனர்வாழ்வு, புனரமைப்புச் செயலகத்தில் வழங்கற் கட்டளைகளைப்பெற்று, பொருள்களை உடனடியாக எடுத்துச் செல்லுமாறு யாழ். அரச அதிபர் அறிவித்தள்ளார். (அ-1)

# சித்திரவதைக்கு ஆளானவர்கள் சிகிச்சை பெறச் செல்வதில்லை

## ஆய்வின் மூலம் கண்டறிவு

குருநகர், மே 29

குடாநாட்டில் கடந்த காலங்களில் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டவர்கள் சிகிச்சை பெறச்செல்வதில்லை. அச்சம் காரணமாகவே அவர்கள் சிகிச்சைக்கு செல்வதற்குப் பின்னடிக்கிறார்கள். சித்திரவதைகள் குறித்த முறைப்பாடுகளும் உரிய வகையில் செய்யப்படுவதில்லை.

1985ஆம் ஆண்டுமுதல் சித்திரவதைக்கு ஆளானவர்களின் நிலை குறித்தும், அவர்கள் வைத்திய சிகிச்சை பெற்றுள்ளார்களா என்பது குறித்தும் மருத்துவக்குழு ஒன்றினால் மேற்கொள்ளப்பட்ட சமூக ஆய்வின் மூலம் இந்தத் தகவல்கள் வெளிவந்துள்ளன. மூன்று கிராமங்களில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் மூலம் தெரியவந்துள்ள முக்கிய தகவல்கள் வருமாறு-

- சித்திரவதைகள் பற்றிய முறைப்பாடுகள் முறையாகச் செயற்படுத்தப்படுவதில்லை. இதற்கு பாதுகாப்பின்மையும் ஒரு காரணமாகும்.
- 3 கிராமங்களில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் போது 31 பேர் சித்திரவதையினால் பாதிக்கப்பட்டு இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.
- இச்சித்திரவதைகள் 1985ஆம் ஆண்டு தொடக்கம் 2007ஆம் ஆண்டு வரை நிகழ்ந்துள்ளன. இவற்றில் 68 சதவீதமானவை சித்திரவதைகள் 1996ஆம் ஆண்டிற்கும் 2000ஆம் ஆண்டிற்கும் இடையில் நிகழ்ந்துள்ளது.
- ஆய்வுக்குள்ளானவற்றில் 67 வீதமான சித்திரவதைகள் இலங்கை இராணுவத்தினாலும் 19 வீதமான சித்திரவதைகள் இந்திய அமைதிப்படையினாலும் 10 சதவீதமான சித்திரவதைகள் இலங்கைக் கடற்படையாலும் செய்யப்பட்டுள்ளன என்று கண்டறியப்பட்டது.

36 சத வீதமான சித்திரவதைகள் பாதிக்கப்பட்டவர்களின் வீட்டுகளில் நிகழ்ந்துள்ளன. 39 சதவீதமான சித்திரவதைகள் தடுப்புக்காவலின்போது நிகழ்ந்துள்ளன.

இவர்களுக்கு உளவளத்துணை, மருத்துவ சிகிச்சை, யோகா சிகிச்சை, இயன் மருத்துவ சிகிச்சை ஆகியன இப்போது அளிக்கப்பட்டு வருகின்றன.

(அ-1-51)

# பணிப்புறக்கணிப்புக்கு முன்னறிவிப்பு

யாழ்ப்பாணம், மே 29

வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் கீழ் இயங்கும் சுழிபுரம் உப அலுவலகப் பொறுப்பத்திகாரியின் சம்பளம் உரிய நியமப்பிரகாரம் வழங்கப்படவில்லை என்றும்-

அது நிவர்த்தி செய்யப்படாவிட்டால் தமது சங்கத்தினர் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட உள்ளதாக வலிகாமம் மேற்கு பிரதேச சபை பணியாளர் நலன்புரிச் சங்கம் தெரிவித்துள்ளது.

இதே வேளை-

வலிகாமம் மேற்குப் பிரதேச சபையின் கீழ் இயங்கும் சுழிபுரம் உப அலுவலகத்தின் பொறுப்பதிகாரிக்கு உரிய முறையில் சம்பளம் வழங்கப்படவில்லையெனத் தெரிவித்து மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்திலும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஏனைய உப அலுவலகங்களின் பொறுப்பதிகாரிகளது சம்பளம் உரிய முறையில் வழங்கப்படுகின்ற போதிலும் சுழிபுரம் உப அலுவலகப் பொறுப்பதிகாரியின் சம்பளம் மட்டும் உரிய முறைப்படி வழங்கப்படவில்லை என அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாகத் தாம் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கும் அறிவித்துள்ளதாகவும், விரைவில் உரிய தீர்வு கிடைக்காவிட்டால் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட முடிவு செய்துள்ளதாவும் அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான விசாரணைகளைத் தாம் மேற்கொண்டுள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அதிகாரிகள் தெரிவித்தனர். (அ-50)

## சூரியக்கலங்கள் குறித்த கருத்துரை இன்று பல்கலையில்

யாழ்ப்பாணம், மே 29

குடாநாட்டின் மின்பாவனையில் சூரியக் கலங்களின் பயன்பாடு குறித்து யாழ். பல்கலைக்கழகத்தில் இன்று கருத்துரை வழங்கப்படுகிறது.

பல்கலைக்கழக பௌதிகத்துறை விரிவுரை மண்டபத்தில் ''யாழ். குடாநாட்டு மின்பாவனைக்கு சூரியக் கலங்களே மிகப் பொருத்தமான மாற்றீட்டுச் சக்தி முதல்'' என்ற பொருளில் பௌதிகத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி பு. ரவிராஜன் கருத்துரை வழங்குவார்.

இன்று முற்பகல் 11.30 மணிக்கு இந்நிகழ்வு இடம்பெறும். ஆர்வலர்கள் இதில் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (அ-203)

## நாளை

| | |
|---|---|
| வைகாசி - 16 | புதன்கிழமை 30.05.2007 |
| திதி:சதுர்த்தசி | பின்னிரவு : 05.39 |
| நட்சத்திரம்: | விசாகம் முழுவதும் |
| சுபநேரம் | : 04.22 - 05.52 |
| [illegible] | : 11.52 - 01.22 |

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், மே 29

நவாலி வடக்கு தோற்றாமரத்தடி ஞானவைரவர் ஆலய சங்காபிஷேகம் எதிர்வரும் முதலாம் திகதி முற்பகல் 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதில் 1008 சங்குகளால் வைரவப் பெருமானுக்கு அபிஷேகம் இடம்பெற்று சகஷ்ரநாம அர்ச்சனையும் இடம்பெறவுள்ளது. தொடர்ந்து மகேஸ்வர பூசையும் இடம்பெறவுள்ளது. (203)

* * *

குடத்தனை, மே 29

பருத்தித்துறை ஆத்தியடிப் பிள்ளையார் ஆலயத்தின் தேர்த்திருவிழ நாளை புதன்கிழமை நடைபெறவுள்ளது.

இந்த ஆலயத்தின் வருடாந்தப் பெருந் திருவிழா கடந்த 22ஆம் தகிதி செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது. (203-78)

* * *

குடத்தனை, மே 29

குடத்தனை கிழக்கு மாளிகைத் திடல் கண்ணகை அம்மன் ஆலய வருடாந்தப் பொங்கல் உற்சவம் இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறுகிறது.

இந்தப் பொங்கல் உற்சவத்திற்கான கிரியைகள் விசேட பூசை வழிபாடுகள் கடந்த திங்கட்கிழமை 21ஆம் திகதி தொடக்கம் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன. (203-78)

## கரவெட்டியைச் சேர்ந்தவரை காணவில்லையென முறைப்பாடு

யாழ்ப்பாணம், மே 29

கரவெட்டியைச் சேர்ந்த ஒருவரைக் காணவில்லை என்று மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கந்தையா கதிரித்தம்பி (வயது - 53) என்பவரையே காணவில்லை என்று முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த 23ஆம் திகதி காலை மந்திகை வைத்தியசாலைக்குச் சென்ற இவர் பின்னர் வீடு திரும்பவில்லை என்று இவரது உறவினர்கள் முறைப்பாட்டில் தெரிவித்துள்ளனர். (அ-12)

## இடம்பெயர்ந்த பாடசாலை மாணவருக்குச் செயலமர்வு

யாழ்ப்பாணம், மே 29

தென்மராட்சி பிரதேசத்தில் இடம்பெயர்ந்த பாடசாலைகளின் அதிபர்கள் மற்றும் மாணவர்கள் ஆகியோருக்கான செயலமர்வு இன்று சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் நடைபெறும்.

சிறுவர் பாதுகாப்பு நிதிய நிறுவனத்தின் அனுசரணையுடன் நடத்தப்படும் இச் செயலமர்வுக்கு இடம்பெயர்ந்த இரு மாணவர்களையும் சம்பந்தப்பட்ட பாடசாலை மாணவர் இருவரையும் அழைத்து வருமாறு பாடசாலை அதிபர்கள் கேட்கப்பட்டுள்ளனர்.

உசன் இராமநாதன் மகா வித்தியாலயம், கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயம், வரணி மகா வித்தியாலயம், மிருசுவில் றோ.க.த.க. பாடசாலை, எழுதுமட்டுவாள் ஸ்ரீகணேசா வித்தியாலயம், மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளைச் சேர்ந்த அதிபர், மாணவர்களுக்கே செயலமர்வு நடத்தப்படவுள்ளது. (1-207)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓமந்தை சோதனை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி கடந்த வாரம் கிளிநொச்சி சென்று புலிகளுடன் பேச்சு நடத்தினார். ஓமந்தை சோதனைச் நிலையத்தைத் திறப்பதற்கு புலிகள் உத்தரவாதம் வழங்கியுள்ளனர் என்றும் இப்போது பாதுகாப்பு அமைச்சின் அதிகாரிகளுடன் பேச்சு நடத்தி வருவதாகவும் செஞ்சிலு வைச் சங்கப் பேச்சாளர் தெரிவித்தார்.

இதேவேளை, கிளிநொச்சி, முல்லைத் தீவு வைத்தியசாலைகளில் இருந்து மேலதிக சிகிச்சைக்காக நோயாளிகளை வவுனியா மருத்துவமனைக்கு அனுப்பிவைக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதேபோல் அப் பகுதிகளிலிருந்து சிகிச்சைக்காக வவுனியா வந்த நோயாளிகள் திரும்பிச் செல்ல முடியாத நிலையும் ஏற்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

**மேலதிக சிகிச்சை பெறமுடியாததால் வன்னியில் 5 நோயாளர் மரணம்**

ஓமந்தைப் பாதை மூடப்பட்டதையடுத்து கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களிலிருந்து மேலதிக சிகிச்சைக்காக வவுனியா மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட வேண்டிய ஐந்து நோயாளர்கள் பரிதாபமாக மரணமடைந்துள்ளனர் என்று வன்னியில் தகவல் வெளியாகியுள்ளது.

## எம்.பிக்கள் மிரட்டப்படுவது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உரிமைகளைப் பாதுகாப்பதற்கான உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கோரி மனித உரிமைகள் அமைச்சர் மஹிந்த சமரசிங்கவுக்கு கடந்த ஏப்ரல் மாதம் 5 ஆம் திகதி கடிதம் ஒன்றை அனுப்பினேன்.

அந்தக் கடிதத்தின் பிரதியை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு அனுப்பி வைத்தேன். இது தொடர்பாக அமைச்சர் மஹிந்த சமரசிங்க எதுவித பதிலும் அளிக்கவில்லை. ஆனால், ஐக் கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக் குழு இந்த முறைப்பாடு தொடர்பாக இலங்கை அரசிடம் விளக்கங் கோரி யுள்ளது.

ஆனால், அரசு விளக்கமளிக்காமல் மௌனமாக இருக்கின்றது. கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டிருக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பை அதிகரிப்பதற்கான உரிய நடவடிக்கையை அரசு எடுப்பதோடு ஐ. நாவின் கேள்விக் கும் விடை அளிக்கவேண்டும். - இவ்வாறு ஜயலத் எம். பி. தெரிவித்தார். (சி)

## இரத்மலானை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதனைவிட நான்கு விசேட அதிர டிப்படையினரும் காயமடைந்துள்ளனர்.

இந்தத் தாக்குதலின் உண்மையான இலக்கு என்ன என்பதனை உடனடியாகக் கூறமுடியாது.

இதன் மூலம் விடுதலைப்புலிகள் சிவிலியன்களின் நலன்குறித்து எதுவித கரிசனையும் செலுத்தவில்லை என்பதை மட்டுமே இப்போது எம்மால் கூறமுடியும். தற்போது கொழும்பை அண்டிய பகுதி யில் பாதுகாப்பு நிலைமைகள் பலப்படுத்தப்பட்டு, தீவிர விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன - என்றார். (சி)

## இரத்மலானையில் கிளைமோர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனக்கருதப்படுகின்றது.

விசேட அதிரடிப் படையினரின் கட்டுக்குருந்தைப் பயிற்சி நிலையத்தில் இருந்து கடவத்தை முகாமுக்குச் சென்றுகொண்டிருந்த ட்ரக் ஒன்று காலிவீதியில் சம்பந்தப்பட்ட கடையின் முகப்புப் புறத்தைக் கடந்த சமயம் கிளைமோர் வெடிக்க வைக்கப்பட்டிருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

நேற்றுத் திங்கட்கிழமை மாலையில் அலுவலகம் முடிந்து காலி வீதியில் மக்கள் கூட்டம் திரண்டிருந்த சமயத்தில் இக்கிளைமோர்க் குண்டு வெடித்ததால் அப்பாவிப் பொதுமக்கள் அதில் பெருமளவில் சிக்கினர்.

சம்பவத்தில் படுகாயமுற்றவர்கள் களுபோவில, பாணந்துறை மற்றும் கொழும்பு தேசிய வைத்தியசாலைகளுக்கு கொண்டு விரையப்பட்டனர்.

இவர்களில் களுபோவில வைத்தியசாலையில் ஐவரும், பாணந்துறை வைத்தியசாலையில் ஒருவரும், கொழும்பு வைத்தியசாலையில் ஒருவரும் நேற்று முன்னிரவு உயிரிழந்தார்கள். மற்றொருவர் நேற்று நள்ளிரவில் மரணமானார்.

படுகாயமுற்றபலரின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ)

## குற்றச் செயல்களைத் தடுக்க பொலிஸார் வான்வழி ரோந்து

### ஹெலிக்கொப்டர்களின் உதவியுடன் ஏற்பாடு

கொழும்பு, மே 29

குற்றச் செயல்கள் மற்றும் சட்டவிரோத நடவடிக்கைகளைத்தடுப்பதற்காகபொலிஸ்திணைக்களத்தினால் கடந்த 24 ஆம் திகதியிலிருந்து பொலிஸ் வான்வழி ரோந்துச் செயலகமொன்று நிறுவப்பட்டுள்ளது.

பொலிஸ்தலைமைஅலுவலகத்தில்நடைபெற்றஊடகவியலாளர் சந்திப்பின்போது பொலிஸ் மா அதிபர் விக்டர் பெரேரா இதனைத் தெரிவித்தார்.

இச்செயலகத்தின் நடவடிக்கைகளுக்காக பொலிஸ் திணைக்களத்துக்கு ஹெலிக்கொப்டர் உதவியைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படு வதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த வான்வழி ரோந்து செயலக அதிகாரிகள் வான் சுற்றுப்பயணங்களில் ஈடுபட்டு குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்து வதோடு ஏதாவது குற்றமொன்றைப்புரிந்து விட்டுத் தப்பியோடும் ஆள்களைத் துரத்திச்சென்று அவர்கள் தப்பியோடும் இடத்தை அடையாளங்கண்டு சுற்றியுள்ள பொலிஸ் நிலையங்களுக்கு அறியக் கொடுப்பதன் மூலம் அவர்களைக் கைதுசெய்ய முடியுமெனவும் - மேலும் பொலிஸாரின் பல்வேறு பணிகளுக்கு இச் சேவையின் மூலம் உதவ முடியும் எனவும் குறிப்பிட்டார்.

ஆள்களைக் கடத்துவதற்கு எதிராக தமது திணைக்களம் கடுமையான நடவடிக்கை களை எடுத்து வருகிறது எனவும் பொலிஸ் மா அதிபர் தெரிவித்தார். (சி)

## மந்துவிலில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைமை மையம் நேற்றிரவு இதனை அறிவித்தது.

தாம் மேற்கொண்ட தேடுதலின்போது இருவரும் மறைத்து வைத்திருந்த குண்டுகளைப் படையினர் மீட்டுள்ளனர் - என்றும் தெரிவிக்கப்பட்டது.

குண்டுதாரிகளின் நடவடிக்கையினால் பொது மக்களுக்கு பெரும் உயிர்ச் சேதம் ஏற்பட்டிருக்கும். படையினருக்கு எதிரான தாக்குதலை நடத்தும் போது பொது மக்கள் அதில் அகப்பட்டு உயிரிழக்கும் சந்தர்ப்பங்கள் ஏற்படலாம்.

பயங்கரவாதிகள் அழிவு நடவடிக்கையில் ஈடுபட்டால் தகவல் தரவும் - இப்படி நடவடிக்கைச் செயலக செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-1)

## தொடர்ந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரசன்னம் இல்லாவிட்டாலும் அரசும், புலிகளும் ஓமந்தைச் சோதனைச் சாவடியைத் திறப்பதற்கு இணக்கம் காணப்பட்டால் அதற்குக் கண்காணிப்புக் குழுவின் ஒத்துழைப்பு முழு அளவில் வழங்கப்படும் - என்றார். (சி)

## நாட்டை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வருவதாகக் கூறப்படும் ஊழல் மோசடிகள் போன்றவற்றை எதிர்த்து ஐக்கிய தேசியக் கட்சி நாடளாவிய ரீதியில் நடத்திவரும் எதிர்ப்பு நிகழ்வுகளில் ஒன்றாக 'இறைவனிடம் வேண்டுதல்' என்ற தலைப்பில் சமய வழிபாட்டுப் போராட்டத்தைத் தொடங்கத் திட்டமிட்டுள்ளது.

இந்தப் போராட்டம் அடுத்த மாதம் 17 ஆம் திகதி அநுராதபுரத்தில் ஆரம்பமாகி நாடு முழுவதும் நடத்தப்படும் என்று ஐக் கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது. (சி)


**2008 தரம் 4 மாணவர்களுக்கான**
திரு.கணேசலிங்கம் அவர்களின்
**வெற்றித்தேர்வு - 1**
கொழும்பில் இருந்து வெள்ளி வெளிவருகின்றது.
டிசெம்பர் வரை 15 தேர்வுகள்.
**2007 தரம் 5 மாணவர்களுக்கான**
**வெற்றித்தேர்வு - 12, 13**
இப்போது சகல புத்தகசாலைகளிலும்
தரம் 4 முதல் O/L வரை
இடைத்தவணைப் பரீட்சை
வினாப்பத்திரங்கள் வெளியாகி
விட்டன.
மேலதிக விவரங்களுக்கு:
0773126807, 021 2229016, 012 2263815

**கணக்கீடு**
கருத்தரங்கு
(அலகுரீதியானவை)
New Science Hall
நாளை 9 a.m.
Shamrock Centre
நாளை 12 மணி.
Niru Tuition Centre
நாளைமறுதினம் 11 a.m.
New Universal Jaffna
வெள்ளி 8 a.m.
S.தவா
[B.Com.(hons) (Acc.spl]

**நாகம்ஸ் சினிமா** சுன்னாகம்
விஜய், அசின், வடிவேல் நடித்த
(தீல்ஸ்)
**போக்கிரி**
தினசரி : 11மணி, 3மணி.


**MATHS SPECIAL CLASS**
Maniyarpathy Rd,
Kokuvil West, Kokuvil.
தரம் 6 முதல் 11 வரை
ஆசிரியர்கள்:
S.J.Neethan (B.Sc)
K.V.Ruban (B.Sc)
ஆரம்பம் : 01.06.2007
வெள்ளிக்கிழமை
மாலை 4 மணி
அனுமதிகளை முன் கூட்டியே பெறவும்.
தொடர்புகளுக்கு:
K.V.Ruban

**பௌதிகவியல் A/L**
ஆனைக்கோட்டை - அஸ்ரன்
சங்கானை - கேம்பிறிஜ்
சுன்னாகம் - சக்திகல்வி நிலையம்
இணுவில் - N.C.A
சங்கானை - தர்மாகல்வி நிலையம்
வட்டுக்கோட்டை - புதிய விஞ்ஞான கல்வி நிலையம்
சுதுமலை - புகழ் கல்வி நிலையம்
S.T.Nimalraj

**விற்பனைக்கு**
S.L.T. தொலைபேசி இணைப்பு
விற்பனைக்கு உண்டு.
தொடர்பு : 0779626985
கோண்டாவில்மேற்கு, கோண்டாவில்

**இறைச்சிக் கோழிக்குஞ்சு விநியோகம்**
ஒரு நாள் இறைச்சிக்கோழிக் குஞ்சுகள் இன்று விநியோகிக்கப்படும். தேவையானோர் ஆனைக்கோட்டைச் சந்தியில் சிறீ விநாயகர் ஸ்ரோரில் பெற்றுக்கொள்ளலாம்.

**விற்பனையாகின்றன!**
**புதிய பாடநூல்கள்**
✱ பாலர் வகுப்பு முதல் பல்கலைக்கழகம் வரை கற்போருக்கான புதிய பாட நூல்கள் ஒரே இடத்தில் விற்பனையாகின்றன!
இடம்: யாழ்.இந்துக் கல்லூரி
(குமாரசாமி மண்டபம்- முதலாம் மாடி)
காலம்: 28.05.2007 முதல் 03.06.2007 வரை
நேரம்: காலை 9.00 மணி முதல் பி.ப 4.00 மணி வரை நடைபெறும்.
மற்றும் வியாபாரிகள், பாடசாலைகள், பொது நிறுவனங்கள் அனைத்துக்கும் குறித்த விலையில் 10% கழிவு வழங்கப்படும்.
தொடர்பு:
**ஸ்ரீலங்கா புத்தகசாலை**
234, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021 222 2573



**வருடாந்த திருவிழா**
கரம்பொன் புனித வேளாங்கண்ணி அன்னை பதியின் வருடாந்த திருநாள் இம்மாதம் 31ஆம் திகதி வியாழக் கிழமை கரம்பொன் பங்குத்தந்தை அருட்தந்தை சோபனின் தலைமையில் இடம்பெறும். திருநாள் திருப்பலி காலை 7 மணிக்கு திருச்செபமாலையுடன் ஆரம்பமாகும். அதற்கு ஆயத்தமாக 30ஆம் திகதி மாலை 4 மணிக்கு நற்கருணை விழா இடம்பெறும் என்பதை அன்னையின் பக்தர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.
அன்னை வேளாங்கண்ணியின் ஆசீர்வாதம் உங்களுக்குக் கிடைப்பதாக. **A.C.D.**

**தொழிற்பயிற்சிகள்**
RADIO, T.V. AND VIDEO DECK REPAIRING
Radio, Video Deck, Satelite, Television, CD Player, Printer, Amplifier, UPS, Monitor
ELECTRICALWIRING AND REWINDING
House Wiring, Single Phase Motor, Table Fan, Three Phase Wiring, Transformer, Three Phase Motor
REFRIGERATION AND AIRCONDITIONING
Refrigerator, Spilt AC, Package AC, Deep Freezer, Window AC
சகல பயிற்சிகளும் முழுநேர செய்முறைப் பயிற்சியுடன் பயிற்சியளிக்கப்பட்டு சான்றிதழ் வழங்கப்படும்.
பயிற்சிகள் ஆரம்பம் :- 01-06-2007 (கிழமை நாள்கள்)
03-06-2007 (சனி, ஞாயிறு)
விவரங்களிற்கு
JAFFNA TECHNICAL INSTITUTE
45, Clock Tower Rd. Jaffna. T.P.: 021 222 6434 (61999)
Dr. சிறீ பத்மநாதன் கட்டடம், சிலையடி, புலோலி.

**புதிய பிரிவுகள் ஆரம்பம்**
Accounting packages
ICT,GIT
VB,DTP
MCS Supported By UNDP/JRRP
விபரங்களிற்கும், பதிவுகளிற்கும் 30-05-2007 முன் நேரில்
324, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.


## மரண அறிவித்தல்கள்

### துரை திரேசம்மா



இராசேந்திரா வீதியைச் சேர்ந்த துரை திரேசம்மா நேற்று (28.05.2007) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லப்பா-எலிசபெத் தம்பதியரின் அன்பு மகளும் துரையின் (முன்னாள் சாரதி, யாழ்.மாநகர சபை) அன்பு மனைவியும் காலஞ்சென்ற செபஸ்ரியாம்பிள்ளை (தச்சுவேலை ஆசிரியர்), காலஞ்சென்ற தேவசகாயம் (சிறைச்சாலை உத்தியோகத்தர்), இம்மானுவேல் (நூலக பரிசோதகர்), தோமஸ் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் அருள்தாஸ் (கனடா), அருள்ராஜ் (பிரான்ஸ்), அனடா( கனடா) ஆகியோரினி அன்புத் தாயுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (29.05.2007) செவ்வாய்க்கிழமை பி.ப. 3 மணிக்கு புனித கொஞ்சேஞ்சி மாதா கோயிலுக்கு எடுத்துச் செல்லப்பட்டு திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.12, இராசேந்திரா வீதி,
யாழ்ப்பாணம். (61042)

தகவல்:
சகோதரர், பிள்ளைகள்.

### பொன்னுத்துரை இராசதுரை



புங்குடுதீவு, 4ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை இராசதுரை நேற்று (28.05.2007) திங்கட்கிழமை ஜேர்மனியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னுத்துரை மற்றும் மனோன்மணி தம்பதியரின் அன்புப் புதல்வனும் யோகராணியின் (ராணி) அன்புக் கணவரும் சின்னத்துரை-பொன்னம்மா தம்பதியரின் மருமகனும் தினேஸ்ராஜ், நிருஷன், அனு ஆகியோரின் அன்புத் தந்தையும் மலர், கண்ணன், ராசாத்தி, ரஞ்சி, தரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் நாகராசா, சிவகுமார், விசித்திரா, காலஞ்சென்ற சுந்தரம் மற்றும் ஏகாம்பிகை, வாணி, தர்மகுலசிங்கம், றோகினி, காலஞ்சென்ற நேசன் மற்றும் கேயா ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஜேர்மனியில் நடைபெறும் என்பதை அறியத்தருகின்றோம்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

V.S லேன், மானிப்பாய் றோட்,
ஐந்துசந்தி,
யாழ்ப்பாணம். (61041)

தகவல்:
மனோன்மணி (தாய்), சகோதரர்கள்,
சின்னத்துரை (மாமன்).

### Dr. சீ.சரவணபவன்



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் கிருலப்பனை, கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட Dr.சீ.சரவணபவன் 27.05.2007 அன்று காலமானார்.

இவர் கோப்பாயிலும் பின்னர் நீர்கொழும்பு Central Nursing Home இலும் கடமையாற்றியவராவார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சீனிவாசகம்-சுந்தரம்மாள் தம்பதியரின் புதல்வனும் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை தம்பதியரின் மருமகனும் தவச்செல்வராணியின் அன்புக் கணவரும் உமா (கனடா), சதீஸ் (WFP), சந்தோஷ் (HNB) ஆகியோரின் அன்புத் தந்தையும் சத்தியசீலன் (கனடா), சர்மிலி (Unicef) ஆகியோரின் மாமனும் அகிலாண்டேஸ்வரன் (லண்டன்), அம்பிகை, செந்திநாதன் (கனடா) ஆகியோரின் சகோதரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் பொரளை ஜெயரட்ண மலர்ச்சாலையில் இன்று (29.05.2007) செவ்வாய்க்கிழமை மு.ப.9 மணியிலிருந்து அஞ்சலிக்கு வைக்கப்பட்டு, பிற்பகல் ஒரு மணியளவில் இறுதிக் கிரியைகள் நடைபெற்று, கனத்தை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

42/1, 1/1, Robert Gunawardena
Mawatha, Kirulaponne, Colombo-6.
T.P: 2512231 (சி/52505)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 29.05.2007இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.